# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

## IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.

## DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE

## SESSIONS CASE NO. 112/2019 அ.சா.10

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. மீனாட்சி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 06.10.2025.

**முதல் விசாரணை:—**

நான் பொதும்பு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இறந்துபோன மாரியம்மாள் வீட்டில் முன்பு வேலை பார்த்தேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். பின்பு அதே காம்பவுண்டில் உள்ள சக்திகுமார் என்பவர் வீட்டில் வேலை பார்த்தேன். 16.06.2018ம் தேதி சக்திகுமார் வீட்டில் வேலை செய்ய மாலை சுமார் 4 மணியளவில் வந்தேன். சுந்தரி அம்மாள், மாரியம்மாள் வீட்டின் கதவை திறந்தார். நான் போய் பார்த்தேன். அப்போது மாரியம்மாள் கழுதில் கத்தியால் குத்தப்பட்டிருந்து இறந்துகிடந்தார். நான்

பார்த்தபோது உயிர் இல்லை. போலீசார் சுமார் 5, 6 மணியளவில் வந்தார்கள். என்னை விசாரித்தார்கள். அன்று இரவு 10, 11 மணியளவில் ஈஸ்வரன் வீட்டின் சிலாப்பில் இருந்து முகப்பு வைத்த செயின் ஒன்றை எடுத்தார்கள். தேவிகா ஆஸ்பத்திரி கேமராவிலிருந்து போலீசார் செயின் இருந்த இடத்தை பார்த்தார்கள். பிறகு காரியம் நடக்கும்வரை இறந்துவிட்டு ஊருக்கு போய்விட்டேன். ஒருநாள் கரிமேடு காவல்நிலையத்திற்கு கூட்டிட்டு போய் அங்கு வைத்து என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சக்திகுமாரின் மனைவி இறந்துவிட்டார். சக்திகுமார் வீட்டில் அவரும், அவரது மகன் விஸ்வாவும் வசித்து வந்தார்கள். சக்திகுமார் வீட்டில் தங்கி தான் வேலை பார்த்து வந்தேன். மாரியம்மாள் தான் அங்கு என்னை வேலைக்கு சேர்த்துவிட்டார். மாரியம்மாளுக்கு வேண்டிய உதவிகளையும் நான் செய்து வந்தேன். மாரியம்மாளுக்கு 1 பெண் குழந்தையும், 1 ஆண் குழந்தையும் உள்ளனர். அவர்கள் வெளியூரில் இருந்தார்கள். நான் பொதும்புக்கு என் அம்மாவை பார்க்க போய்விட்டு வந்தபோது தான் சம்பவம் பற்றி தெரியும். 16.06.2018ம் தேதியன்று காலை தான் என் அம்மாவை பார்க்க போனேன். சுந்தரி சொல்லி தான் மாரியம்மாள் இறந்த விபரம் எனக்கு தெரியும் என போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரிதான். சுந்தரி தான் மாரியம்மாள் வீட்டின் கதவை திறந்து உள்ளே போனதாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரிதான். மாரியம்மாள் இறந்துகிடந்தபோது மாரியம்மாளின் கையில் 4 வளையல், கழுத்தில் செயின், காதில் மாட்டல், 2 தோடு இருந்தது என்று சொன்னால் அது சரிதான். அந்த நகைகளை நான் சுத்தம் செய்து

பாத்திரத்தில் வைத்தேன் என்று சொன்னால் 4 வளையல், மோதிரம் ஆகியவற்றை எடுத்து நான் கழுவி வைத்தேன். போலீசார் விசாரித்தபோது 4 வளையல், மோதிரம் ஆகியவற்றைஎடுத்து நான் கழுவி வைத்தேன் என்று சொன்னேனா என்று கேட்டால் சொன்னேன்.

மேற்படி நகைகளை போலீசாரிடம் எப்போது ஒப்படைத்தேன் என்று கேட்டால் அப்போது உடனே ஒப்படைத்துவிட்டேன். நான் எந்த போலீசாரிடம் நகைகளை ஒப்படைத்தேன் என்று எனக்கு தெரியாது. தேவகி ஆஸ்பத்திரி கேமராவிலிருந்து நகை இருந்த இடத்தை போலீசார் கண்டுபிடித்ததாக போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்று கேட்டால் சொன்னேன். போலீசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**Sd/-** மீனாட்சி

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.